# பெனெஸ்டா நிறுவனம் கோவையில் துவக்கம்

கோவை, மே 10

இந்தியாவின் முன்னணி ஜன்னல்கள் மற்றும் கதவு தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் நிறுவனமான பெனெஸ்டா, கோவையில் புதியதாக ஒரு ஷோரூமைத் திறந்துள்ளது. சிஏ எண்டர்பிரைசஸ் என்ற இந்த பிரத்யேக ஷோரூம், கோவை சாய்பாபா காலனியில் அமைந்துள்ளது. சிறந்ததரமான யுபிவிசி ஜன்னல்கள் மற்றும் கதவுகளை இங்கு காட்சிப்படுத்த உள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த பினெஸ்டா நிறுவனத்தின் வர்த்தகத் தலைவரான சாகேத் ஜெயின் "பெனெஸ்டாவின் உத்தியானது வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வெளிப்படையான அணுகு முறை மற்றும் அதிக நுகர்வோர்களை சென்றடைவது ஆகிய 2 முக்கிய அம்சங்களை கொண்டுள்ளது. இதற்காக எங்களின் ஷோரூம்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதுடன் 1000 -த்துக்கும் மேற்பட்டவகைகளில் ஜன்னல்கள் மற்றும் கதவுகளை வடிவமைத்து வருகிறோம். வாடிக்கையாளர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டும், மழை, தூசி, சத்தம், மாசு ஆகிய சுற்றுச் சூழல் விஷயங்களைக் கருத்தில் கொண்டும் எங்கள் தயாரிப்புகளை வழங்கி வருகிறோம் என்றார்.